# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **குப்தர்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## குப்தர்கள் (கி.பி.270 - 570)

- குப்தர்களின் பேரரசே இரண்டாவது இந்தியப் பேரரசாகும்.
- குப்த ஆட்சியை நிறுவியவர் **ஸ்ரீகுப்தர்**.
- அடுத்து பட்டத்திற்கு வந்தவர் அவருடைய மகன் கடோத்கஜன். இவர்கள் இருவரும் **மகாராஜா** என அழைக்கப்பட்டனர்,
- கடோத்கஜனின் மகன் **முதலாம் சந்திரகுப்தர்** குப்த அரசை பேரரசாக மாற்றினார்.

### முதலாம் சந்திரகுப்தர் (கி.பி.320- 330)

- **மகாராஜாதி ராஜா** அல்லது **அரசர்களுக்கு அரசன்** என்று முதலில் அழைக்கப்பட்டவர்.
- லிச்சாலி வம்சத்துடன் மன உறவு கொண்டதன் மூலம் தனது வலிமையை பெருக்கிக் கொண்டார்,
- லிச்சாலி வம்சத்தை சார்ந்த குமாரதேவி என்ற இளவரசியை மணந்து கொண்டார்.
- **மெஹ்ருளி** இரும்புத் தூண் கல்வெட்டு அவரது போர் வெற்றிகள் பற்றி குறிப்பிடுகிறது.

### சமுத்திரகுப்தர் (கி.பி.330 - 380)

- முதலாம் சந்திரகுப்தரை அடுத்து பட்டமேறியவர் சமுத்திரகுப்தர்.
- குப்த மரபில் மிகச்சிறந்த அரசர் சமுத்திரகுப்தர்.
- **அலகாபாத் கல்தூண் கல்வெட்டு** அவரது ஆட்சிபற்றி விவரமாகக் குறிப்பிடுகிறது. அவரது படையெடுப்பின் மூன்று நிலைகள் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன.

1. வட இந்திய ஆட்சியாளருக்கு எதிராக மேற்கொண்டவை.
2. தென்னிந்திய ஆட்சியாளர்களுக்கு எதிரான புகழ்மிக்க **தட்சிணபாதா** படையெடுப்பு.
3. வடஇந்திய ஆட்சியாளர்களுக்கு எதிரான இரண்டாவது படையெடுப்பு.

- சமுத்திர குப்தர் அச்சுதன், நாகபாணன் இருவரையும் முறியடித்து மேலை கங்கைச்சமவெளி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.
- இவரது தென்னிந்திய படையெடுப்பின் போது பன்னிரெண்டு ஆட்சியாளர்களை முறியடித்ததாக **அலகாபாத் கல்தூண் கல்வெட்டு** குறிப்பிடுகிறது.
- பாடல்களை இயற்றும் திறமை பெற்று இருந்ததால் இவரை **கவிராஜன்** என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவரது நாணயங்களில் வீணையுடன் அமர்ந்திருக்கும் காட்சி இசையில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும், திறமையையும் எடுத்து காட்டுவதாக உள்ளது.
- இவருடைய தக்காண வெற்றியை பாராட்டி **வின்சென்ட் ஸ்மித்** என்ற வரலாற்று ஆசிரியர் இவரை '**இந்திய நெப்போலியன்**" என குறிப்பிட்டார்.
- **வசுபந்து** என்ற குப்த அறிஞரும் **ஹரிசேனர்** என்ற வீரப் பாடகரும் இவரது அவையை அலங்கரித்தனர்.

**இரண்டாம் சந்திரகுப்தர்** (**கி.பி**.380-415)

- சமுத்திரகுப்தரின் மகன்.
- இரண்டாம் சந்திரகுப்தர் குப்த அரசர்களிலேயே தலைசிறந்தவர்.
- **விக்கிரமாதித்தன்** என அழைக்கப்பட்டார்.
- சாகர்களை வென்றதால் **சாகாரி** என அழைக்கப்பட்டார்.

Ø **பாடலிபுத்திரத்திலிருந்து உஜ்ஜெயினிக்கு** தலைநகரை மாற்றினார்.

Ø இவரது அரசவையில் **காளிதாசர்**, **ஆரியபட்டர்**, **தன்வந்திரி** போன்ற ஒன்பது அறிஞர்கள் **நவரத்தினங்களாக** விளங்கினர்.

Ø இவருடைய காலத்தில் சீன யாத்திரிகர் **பாஹியான்** வருகை தந்தார்.

**<u>குமாரகுப்தர்</u>**.

Ø சந்திரகுப்தரை அடுத்து ஆட்சியமைத்தவர் குமாரகுப்தர்.

Ø இவர் தன்னை **மகேந்திரதாதித்யன்** என அழைத்துக்கொண்டார்.

Ø இவர் காலத்தில்தான் **நாளந்தா பல்கலைக்கழகம்** தோற்றுவிக்கப்பட்டது.

Ø இவருடைய ஆட்சியில் ஹூணர்கள் என்ற முரட்டு சாதியினர் படையெடுத்து தாக்கினர்.

**<u>கந்தகுப்தர்</u>**.

Ø குமாரகுப்தரை அடுத்து பட்டமேற்றவர் கந்தகுப்தர்.

Ø ஹூணர்களை உண்மையில் எதிர் கொண்டு பேரரசை காப்பாற்றினார்.

Ø இவரது மறைவிற்கு பின் புருகுப்தர், புத்தகுப்தர், பாலாதித்யர் போன்றவர்களால் ஹூணர்களின் தாக்குதல்களில் இருந்து குப்த பேரரசை காப்பாற்ற முடியாததால் குப்த பேரரசு மறைந்தது.

Ø ஹூணர்களிடம் நடத்திய போரில் குப்த பேரரசு வீழ்ச்சியை எட்டியது.

## இந்தியாவின் பொற்காலம்

Ø இந்திய வரலாற்றில் குப்தர்களின் காலம் **பொற்காலம்** என அழைக்கப்படுகிறது.

Ø காந்தார சிற்ப முறை கைவிடப்பட்டு, இந்திய சிற்பமுறை மறுமலர்ச்சி பெற்றது.

Ø இக்காலத்தில்தான் இந்து சமயத்தின் முக்கிய நூலான **பகவத்கீதை** பாரதத்தில் சேர்க்கப்பட்டது.

Ø சமஸ்கிருத மொழி வளர்ச்சியடைந்தது.

Ø காளிதாசர் இயற்றிய நூல்கள்- **சாகுந்தலம்**, **இரகுவம்சம்**, **குமாரசம்பவம்**, **மேகதூதம்**, **ரிதுசம்காரம்**, **விக்ரமஊர்வசியம்**, **மாளவிகாக்னிமித்ரம்**.

Ø ஆரியபட்டர் **ஆரியபட்டியம்** என்ற கணித வானசாஸ்திர நூலையும், வராகமிகிரர் **பஞ்சசித்தாந்திகா**, **பிரகத்சம்கிதா** போன்ற நூல்களையும், வராகபட்டர் மருத்துவம் பற்றிய **அஷ்டாங்க சங்கிரகம்** எனும் நூலையும் இயற்றினர்.

Ø விஷ்ணுசர்மா **பஞ்சதந்திர கதையையும்** எழுதினார்.

Ø விசாகதத்தர் **முத்ரரராட்சசம்**, **தேவி சந்திரகுப்தம்** என்ற நாடகங்களை எழுதினார்.

Ø சுத்ரகர் எழுதிய **மிருச்சகடிகம்** நகைச்சுவைக்கும் சோகத்திற்கும் பெயர் பெற்றது.

Ø தண்டி, காவிய தரிசனம், தசகுமாரசரிதம் ஆகிய நூல்களை எழுதினார்.

Ø பாரவி கிருதார்ஜீன்யம் என்ற நூலை எழுதினார். இது அர்ஜீனனுக்கும் சிவபெருமானுக்கும் நடந்த மோதலை குறிப்பிடும் கதை.

Ø தற்போது காணப்படும் புராணங்கள் குப்தர்கள் காலத்தில் தொகுக்கப்பட்டதாகும்.

- இராமாயணம், மகாபாரத நூல்களுக்கு இறுதி வடிவம் குப்தர்கள் காலத்திலேயே அளிக்கப்பட்டது.
- கலை, இலக்கியம், அறிவியல் போன்ற துறைகளில் குப்தர்கள் காலத்தில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டது. எனவே தான் குப்தர்களின் காலம் பொற்காலம் எனப்படுகிறது.

*****